திரு. த. சோணையா : தலைவரவர்களே, இந்தப் புதியரக நெல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலே புன்செய் நிலங்களிலே விதைப்பதாக இருந்தால். அதிகமாக வருமானம் கிடைக்கும் என்று தெரிய வந்திருக்கிறது. அப்படிப்பட்டப் புன்செய் நிலங்களில் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் . புன்செய் நிலங்களில் பயிரிடுவது பற்றி இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை.

பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்தக் கடன்கள்

***210 வினா.—திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்துவதற்கான கடன்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு இப்போது வியாபாரம் செய்வதற்குக் கடன்கொடுப்பதுபோல் பொருளாதாரத்தில் மிகவும் சீர்குலைந்த நிலையிலே இருப்பவர்களுக்கு—பிற்பட்டோருக்கும் கடன் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 250 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை சிறு தொழில் நடத்த கடன் கொடுப்பதற்கு இப்போது ஏற்பாடு செய்ய குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற நெருக்கடியில் உடனடியாகச் செய்ய வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார். பாக்வேர்டு கிளாஸ் கமிஷன் பிற்பட்ட மக்களுக்கு கடன் கொடுப்பது நல்லதென்று பரிந்துரை செய்திருக்கிறதே. அதன் அடிப்படையில் உடனடியாக இந்த அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலாவது நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட குழுவின் சிபாரிசின்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி செய்கிறவகையில் கடன் கொடுக்கலாம் என்றிருக்கிறது. ஆகையால் பிற்படுத்தப்பட்ட மக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி, கடன் உதவி பெறலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.